# பணமும் படிப்பும்

## சம்ஸ்கிருத செல்வம் -- அத்தியாயம் 22

Post No 801 Dated 24th January 2014

By S Nagarajan

பணமும் படிப்பும் வாழ்க்கையில் ஏற்றம் பெறுவதற்கான இரு கண்கள். பணம் மட்டும் இருந்து படிப்பறிவின்றி இருந்தால் மதிப்பில்லை. படிப்பு மட்டும் இருந்து பணமில்லாவிட்டாலோ வாழ்வே இல்லை. இந்த இரண்டையும் பற்றிக் கவிஞர்கள் கூறுவதைப் பார்ப்போம்:-

**புஸ்தகஸ்தா து யா வித்யா பரஹஸ்த கதம் தனம் ।**
**கார்யகாலே சமுத்பன்னே ந ஸா வித்யா ந தத் தனம் ॥**

**யா வித்யா து புஸ்தகஸ்தா** - எந்த அறிவானது புஸ்தகத்தின் அட்டைகளுக்கு இடையே அடங்கிக் கிடக்கிறதோ
**(யத்) தனம் பரஹஸ்த கதம்** - எந்த செல்வமானது இன்னொருவனுடைய ஆதிக்கத்தில் அடைபட்டிருக்கிறதோ இவைகளால் பயன் ஒன்றும் இல்லை!
**கார்யகாலே சமுத்பன்னே (சதி)** - காலம் வரும் போது (அல்லது அவசியமான நேரத்தில்)
**ந ஸா வித்யா (அஸ்தி) ந தத் தனம் (அஸ்தி)** - அந்த அறிவானது கவைக்கு உதவாது ; அந்த செல்வமானது உடனடியாக பயன்படுத்துவதற்குத் தக்கதாக அமையாது

அட்டைகளுக்கு இடையே அடங்கி இருக்கும் புத்தகத்தாலும் அடுத்தவரிடம் இருக்கும் பணத்தாலும் பயன் ஒன்றும் இல்லை!

**அர்த்தானாமர்ஜனே கார்ய வர்தனம் ரக்ஷணம் ததா ॥**
**பக்ஷ்யமாணோ நிராதான: க்ஷீயதே ஹிமவானபி ॥**

செல்வத்தை ஒருவன் முயன்று சேர்க்க வேண்டும். அதை அதிகரித்துப் பாதுகாக்க வேண்டும். அலட்சியமாக அதைப் பாதுகாக்காமல் செலவழித்தால் ஹிமவான் போன்று இருந்தாலும் கூட (நாளடைவில்) தேய்ந்து போவான்.

செல்வத்தைப் பாதுகாப்பதில் அக்கறையும் செலவழிப்பதில் நல்ல நோக்கமும் இல்லாவிடில் ஹிமவானாக இருந்தாலும் செல்வாக்கு குறைந்து அந்தஸ்து இழந்தவனாகி விடுவான் என்பதே இதன் பொருள்.

**சந்த: குர்வந்தே யத்னேன தர்மஸ்யார்த்தே தனார்ஜனம் ।**
**தர்மாசாரவிஹீனானாம் த்ரவிணம் மத்நசஞ்ஜய ॥**

நல்லோர் தர்ம காரியத்திற்காக செல்வத்தைச் சேர்க்கின்றனர். தர்ம காரியத்திற்காகச் செலவழிக்கப்படாத ஒருவனது செல்வமானது மலக்குவியலுக்குச் சமமாகும்

இந்த மூன்று பாடல்கள் மூலம் பணம் சேர்ப்பது பற்றியும் கல்வி அறிவு பற்றியும் நல்ல விளக்கம் கிடைக்கிறது, அல்லவா?
தர்ம வழியில் தர்ம காரியங்களுக்காக ஒருவன் முயன்று செல்வத்தைச் சேர்த்துப் பாதுகாக்க வேண்டும். அதைத் தனது ஆதிக்கத்திலேயே வைத்துக் கொள்ள வேண்டும். படிப்பறிவும் புத்தகத்தின் அட்டைகளுக்குள் இல்லாமல் நன்கு படிக்கப்பட்டு சமுதாய நலனுக்காக உபயோகிக்கப்பட வேண்டும்.

பொருத்தமான கருத்துக்கள், பொருத்தமான சொற்களால்!

***********